முருகப்பெருமான் துணை

**மகான் குமரகுருபரர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.10.2022, செவ்வாய்கிழமை

1. ஞானவான்கள் எனும் சக்திமிகு
ஞானிகளை கலி காலத்திலும்
ஞானம் வழங்கி படைக்க வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் அனுகூல ஆசி
வரங்களென கலிவாழ் மக்களுக்கு
வல்லமைபட சுபகிருது துலை திங்கள்
3. திங்களிலே அட்டமதிகதி குஜன் வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 08 ம் நாள் 25.10.2022, செவ்வாய்கிழமை)
தேசிகனுக்கு குமரகுருபரர் யானும்
ஓங்காரம்பட எடுத்துரைப்பேன்
ஓங்காரக் குடில் படைத்து அருளும்
4. அருளுகின்ற அரங்கமகான் வழி
அகிலத்தில் சிறந்த வழியாகும்
அருளெனும் சக்தி பெற்ற மக்களுக்கு
ஆபத்து அனுகா வாழ்வுமாகி
5. ஆகியே அனுதின பூசைபலனாக
அரங்கமகான் அனுகூலம் கூடி
அகிலத்தில் வினைகளை கடந்து
அறிவிப்பேன் ஞானவான்களாக மாற்றம்
6. மாற்றம் கண்டு மக்களெல்லாம்
மண்ணுலகில் அன்னதானம் எனும்
ஆற்றல் மிக்க தரும வழிகளையும்
அரங்கனால் தொடர்ந்து செய்து
7. செய்து பெறும் ஜீவத் தயவு வழி
சித்திகளும் இனி பிறவி நீக்கும்
அய்யன் ஆறுமுகனார் அனுகூலமும்
ஆசியும் அடைந்து உயர்வர்
8. உயர்வர் ஞானியர் பெருமக்களாக
உலகை மாற்றும் மகா சக்திகளாக
தயவை பெருக்கும் தவசிகளாக
தரணியையே காக்கும் வண்ணம்
9. வண்ணமுடன் அரங்கன் பேரிலே
வையகம் எங்கிலும் தொண்டர்படை
அண்ணலே எனப் பெருகி வர
ஆறுமுகனார் அரங்கனை படைத்த

10. படைத்த அவதார நோக்கம்
பழுதின்றி பரிபூரண பூர்த்தியாகி
தடையற உலகம் எங்கிலுமே
தருமவான்கள் ஞானவான்கள் நிறைந்த

11. நிறைந்த ஞானத் தலைமைகளும்
நீதி காக்கும் ஞான ஆட்சியுமாக
நிறைந்த உலகம் மாற்றம் நிகழும்
நிகழ்த்திய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—